சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டம்:

# ஒன்றிய அரசு இதுவரை ஒரு பைசா கூட நிதி ஒதுக்கவில்லை!

## மக்களவையில் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜூலை 23-

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசு கடந்த 5 ஆண்டுகளாக ஒரு பைசா கூட நிதி வழங்கவில்லை என்று மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு குற்றஞ்சாட் டினார். கூட்டாட்சி அடிப்படையில்தான் ஒன்றிய அரசு இயங்குகிறதா என்றும் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் இதுதொடர்பாக பேசிய கழக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, சென்னையில் மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்தில் 60 சதவீத பணிகள் நிறைவேறிய நிலையில் கூட, ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்கவில்லை என்று கூறினார். வெளிச்சந்தையில் இருந்து கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கி தமிழ்நாடு அரசு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது என்று டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

ஆனால், கடந்த 5 ஆண்டுகளாக ஒன்றிய அரசு ஒரு பைசா கூட நிதி வழங்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார். ஒன்றிய அரசின் செயல்பாடுகளைப் பார்த்தால், நாம் இந்திய ஒன்றியத்தில்தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் எழுகிறது என்றும் மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்தார்.

# ஒட்டன்சத்திரத்தில் 11 புதிய பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் 11 புதிய பேருந்து இயக்கத்தை 21.07.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அறிவிக்காத பல அறிவிப்புகளை அறிவித்து அத்திட்டங்கள் பலன்கள் அனைத்தையும் கிராமப்புறத்தில் வாழும் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைகின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்தினை மேம்படுத்திடவும் பொதுமக்கள் பேருந்து பயணத்தினை அதிகம் பயன்படுத்தவும், சாலை போக்குவரத்தினை மேம்படுத்திடவும் பாதுகாப்பான சூழ்நிலையில் பயணம் செய்வதற்காகவும், குக்கிராமங்களுக்கும் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்பதற்காகவும் புதிய பேருந்துக்களை கொள்முதல் செய்து அனைத்து மாவட்டத்திற்கும் வழங்கியுள்ளார்கள்.

தமிழகத்தில் இயங்கிய பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக இயக்கிடவும், பேருந்து போக்குவரத்து இல்லாத இடங்களுக்கு புதிய பேருந்து சேவையை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் . கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 7666 பேருந்துகளை ரூ.5000 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் மதுரை கோட்டத்தின்கீழ் திண்டுக்கல் மதுரை, மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களில் செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது திண்டுக்கல் அரசு போக்குவரத்துக் கழகத்தின்கீழ் 15 பணிமனைகளில் உள்ள மொத்த போக்குவரத்துகளின் எண்ணிக்கை 498 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 798 ஆகும். திண்டுக்கல் கோட்டத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 3000 ஆகும். இக்கழகம் சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

மேலும், நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட இயக்க தூரம் 3.86 இலட்சம் கிலோ மீட்டர் ஆகும். இதனால், மாதத்திற்கு 15,27,45,416 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் இயக்கம் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 1.96 இலட்சம் பயணிகளும், மாதம் ஒன்றுக்கு 60 இலட்சம் பயணிகளும் பயன்படும் வகையில் வழித்தட சேவைகள் இப்போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட்டு வருகிறது.

07.05.2021 அன்று தமிழக முதலமைச்சர் அவர்களால் மகளிருக்காக விடியல் பயணத்திட்டம் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயண சலுகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் திண்டுக்கல் கோட்டத்தில் 2 இலட்சம் பயனாளர்களும், தமிழ்நாடு முழுவதும் சுமார் 44.65 இலட்சம் பெண்கள் பயனடைந்து வருகிறார்கள் இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு மகளிருக்கு சுமார் 1000 ரூபாய் வரை சேமிப்பு ஏற்பட்டு பொருளாதாரம் மேம்படுகிறது 500 நபர்களுக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் இக்கழகம் பேருந்து சேவையினை தொடர்ந்து செய்து வருகின்றது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திண்டுக்கல் கோட்டத்திற்கு 2022-23, 2023-24 ஆகிய ஆண்டுகளில் 47 கோடி மதிப்பீட்டில் 94 பேருந்துகளும், 2024-25 ஆம் நிதியாண்டில் 75 கோடி மதிப்பீட்டில் 155 கோடி பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 3 புதிய நகரப்பேருந்துகளும், 8 புதிய புறநகரப் பேருந்துகளும் என மொத்தம் 11 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் பழனி-கீரனூர், பழனி-கள்ளிமந்தையம் (தேவத்தூர் வழி ), ஒட்டன்சத்திரம் -குரும்பப்பட்டி (கேதையுறும்பு, இடையகோட்டை வழி ) ஆகிய வழித்தடங்களில் நகரப்பேருந்துகளும், பழனி-திருச்சி வழித்தடங்களில் 3 புறநகரப்பேருந்துக்களும், பழனி-நாகர்கோவில் வழித்தடங்களில் 2 புறநகரப்பேருந்துகளும், பழனி-நெய்வேலி வழிததடங்களில் 1 புறநகரப்பேருந்தும், பழனி-திருச்செந்தூர் வழித்தடங்களில் 1 புறநகரப்பேருந்தும், மதுரை -கோயம்புத்தூர் வழிதடங்களில் 1 புறநக ரப் பேருந்தும் என 11 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் எளிமையான முறையில் பள்ளிகளுக்கு கட்டணமில்லாமல் பேருந்துகளில் சென்று கல்வி கற்பதற்காக இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டத்தினை ஏற்படுத்தி செயல்படுத்தியுள்ளார்கள்.

பொதுமக்களின் நலன் சார்ந்தும் தேவை சார்ந்தும் இயக்கப்படும் பேருந்துகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன் ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புச்சாமி, வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், பொது மேலாளர் .துரைச்சாமி, வணிக மேலாளர் சக்தி, கோட்ட மேலாளர் ரமேஷ், தொழிநுட்ப மேலாளர்கள் சத்தியமூர்த்தி, சண்முககுமார், கிளை மேலாளர்கள் (ஒட்டன்சத்திரம்) சிவசாமி, (பழனி) ஜெயக்குமார், நகர் மன்ற உறுப்பினர் கண்ணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம் சார்பில் , பாவேந்தர் பாரதிதாசன் 134ஆம் பிறந்தநாள்விழா சிங்கப்பூர் தேசிய நூலகப் பதினாறாம் தளத்தில் 20.7.2024 காலை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராகத் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருதாளரும் தி.மு.க. இலக்கிய அணி மாநிலப் புரவலருமான கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நெறியாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் பங்கேற்றார். அவரை நடுவராகக் கொண்டு சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நிகழ்ந்தது. பாரதிதாசனின் குடும்பவிளக்கு காப்பியத்தில் பெரிதும் வலியுறுத்தப் பெறுவது பெண்ணின் பெருமையே, சமூக விழிப்புணர்வே , குடும்பப் பிணைப்பே எனும் தலைப்புகளில் முத்துசுவேதா, சுவர்ணலதா, வானதிபிரகாசு ஆகியோர் வாதிட்டனர்.

தந்தை பெரியாரின் கருத்தியலை

# அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் அறிவியல் முயற்சி!

## பெரியார் விஷன் ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் – கனிமொழி கருணாநிதி உரை!



**சென்னை, ஜூலை 23-**

**சென்னை எழும்பூரில் உள்ள பெரியார் திடலில் 21-07-2024 ஞாயிற்றுக்கிழமை, அன்று நடைபெற்ற பெரியார் விஷன் ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் கலந்துகொண்டு, தந்தை பெரியார் அவர்களின் கருத்துகளை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டுள்ள பெரியார் விஷன் ஓ.டி.டி. தளத்தை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்த விழாவில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார்.**

இந்நிகழ்வில் உரையாற்றிய கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

“பெரியார் விஷன் ஓ.டி.டி. பிளாட்ஃபார்ம் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்றிருக்கும் என்றும் என் ஆசிரியர், இளம் வயதில் இருந்து எனது வழிகாட்டி, எத்தனையோ சோதனைகளில் இருந்து என்னை அழைத்து வந்த, என் கரத்தைப் பிடித்து வந்த ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

சுதந்திரம் என்பதுதான் இன்று இந்த நாட்டில் இல்லாத ஒன்று. இந்த சூழ்நிலையில் பெரியார் திடலில் இருந்துதான் லிபர்டி கிரியேஷன் உருவாக முடியும் என்பதை நிரூபித்திருக்கிறோம்.

**அறிவியலை நேசித்த தலைவர் பெரியார்!**

ஊடகத்துறையாக இருக்கட்டும், சிந்தனையாளர்கள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள் என யாருக்கும் பேச்சுரிமை கிடையாது. இந்த நிலையில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் என்பதை உருவாக்கி, தன் வாழ்நாளில் எல்லாருடைய சுதந்திரத்திற்காகவும் பாடுபட்ட பெரியாருக்காக ஒரு ஓ.டி.டி. பிளாட்ஃபார்ம் உருவாக்கியிருக்கிறோம் என்றால், இந்த உலகத்துக்கே வழிகாட்டியாக இருக்கக் கூடிய அற்புதமான செயல்.

அண்ணன் கலி.பூங்குன்றன் பேசும்போது முதன் முதலில் கம்ப்யூட்டர் வந்தபோது, அது ஓர் அறை முழுதும் அடைத்திருந்ததையும் அதை பெரியார் ஒரு குழந்தையை போல் பார்த்து மகிழ்ந்ததையும் எடுத்துச் சொன்னார்கள்.

அறிவியல் கண்டுபிடிப்பு, புதிய முயற்சி மீது பெரியாருக்கு இருந்த நம்பிக்கை அது. மனிதர்களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வது அறிவியல். தலைமுறை தலைமுறையாக ஒடுக்கப்பட்ட மனிதனை மனித நேயத்தோடு பார்க்கும் தலைவர்கள் அறிவியலை நேசிப்பார்கள்.

பெரியார் எல்லா கண்டுபிடிப்புகள் பற்றியும் பேசியிருக்கிறார். பெரும்பான்மை சமூகத்தின் மனநிலை, பெண் என்றால் சமைக்கத் தெரியவேண்டும் என்பது. இதையெல்லாம் இன்றும் உடைக்க முடியாத நிலையில், அதையெல்லாம் என்றைக்கோ உடைத்தவர் பெரியார்.

இன்றைக்கு ஒரு ரீல்ஸ் பார்த்துக் கொண்டிருந்தேன். உலகத்திலேயே மிக மகிழ்ச்சியான ஆண்கள் யார் என்றால் திருமணமான ஆண்கள். மகிழ்ச்சியான பெண்கள் யார் என்றால் திருமணம் ஆகாத பெண்கள் என்று அந்த ரீலில் சொல்லியிருந்தார்கள். இன்றைக்கு பல பெண்கள் திருமணம் வேண்டாம், குழந்தை வேண்டாம், உலகத்தில் நிறைய குழந்தைகள் இருக்கின்றன. நான் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என சொல்லி வருகிறார்கள். இதையெல்லாம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லித் தந்த முன்னோடி பெரியார்.

**பெண்ணியம் பேசிய தலைவர்!**

உன்னுடைய லட்சியத்துக்கு எது தடையாக இருந்தாலும் அதை உடைத்துப் போடு என்று சொன்ன பெரியாரை விட பெண்ணிய வாதி வேறு யாரும் இல்லை. எந்த தளர்வும் இல்லாமல் பெண்ணியம் பேசிய ஒரே தலைவர் பெரியார் தான்.

இன்று தொழில் நுட்பம் எல்லா வகையிலும் வளர்ந்திருக்கிறது. நமக்கும் அதை பயன்படுத்த தெரியும், எதிர் கருத்து உடையவர்களுக்கும் அதை பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் ஒவ்வொரு நாளும் தவறான செய்திகள், வெறுப்பு, காழ்ப்பு, மனிதத்துக்கே எதிரான செய்திகளை தொடர்ந்து பரப்பி வருகிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல; ஒவ்வொரு நாட்டிலும் இது நடந்து கொண்டிருக்கிறது.

நம்மை 60 ஆண்டுகள் பின்னால் இழுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த சூழலில் நாமும் இதை கையில் எடுத்திருப்பது மகிழ்ச்சி.

**பெரியாரை தெரியாததால் பேசுகிறார்கள்!**

குறிப்பாக இங்கே இளைஞர்கள் அதிகமாக இங்கே வந்திருப்பது நம்பிக்கை தருகிறது.

இந்த தலைமுறை படித்து வெளி நாட்டில் வேலை பார்க்கிறார்கள். பெரிய இடத்தில் இருக்கிறார்கள். அந்த நிலைக்கு உங்கள் மகனோ மகளோ வருவதற்கு பெரியார், திராவிட இயக்க சிந்தனையாளர்கள் நடத்திய போராட்டம் பற்றியெல்லாம் நாம் போதுமான அளவில் சொல்லித் தராததால்... நம் வீட்டுப் பிள்ளைகளே கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்துகொண்டு, ‘எதுக்கு ரிசர்வேஷன்...? மெரிட்தானே முக்கியம். ஏன் சாதிச் சான்றுகளை கேட்கிறீர்கள். நீங்கள்தானே சாதியை வளர்க்கிறீர்கள்?’ என்று கேட்கிறார்கள். பெரியாரை முழுமையாக தெரியாததால்தான் இப்படி பேசுகிறார்கள்.

ஒரு மனிதன் வாழ்ந்து நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் அவரது சிலை மீது காவி வண்ணம் பூசுகிறார்கள். அவரை கொச்சைப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு இதைச் செய்கிறார்கள். அவர்கள் நம்பும் சிலைகள் பேசும் என்றால் பெரியாரும் சிலையாக இருந்து பேசியிருப்பார், ‘இரண்டு இரண்டு செருப்பாக சேர்த்து மாலை போடுப்பா. இல்லையென்றால் பிரயோசனம் இல்லை’ என பெரியார் சிலை வழியாக பேசியிருப்பார். அதற்காக வருத்தப்பட்டிருக்க மாட்டார்.

**எதிர்க்க எதிர்க்கத்தான் விதைக்க முடியும்!**

அந்த மனிதர் பற்றி ஏன் இவ்வளவு பயப்படுகிறார்கள்? அவர்கள் தொடர்ந்து கொச்சைப் படுத்த, கொச்சைப்படுத்தத்தான் அடுத்த தலைமுறையும் பெரியாரை தேடிப் படிக்கத் தொடங்கியிருக்கிறது. இன்று வட மாநிலங்களில் நடக்கும் உரிமைக்கான போராட்டங்களில் கூட பெரியாரின் படத்தை கையில் தூக்கிப் பிடிக்கும் நிலை இருக்கிறது. அதனால் பா.ஜ.க.வுக்கு நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் தொடர்ந்து எங்களை எதிர்க்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து எதிர்க்க எதிர்க்கத்தான் அடுத்த தலைமுறையினர் மனதில் பெரியாரை விதைக்க முடியும்.

அதற்கான மிகச் சரியான வழித்தடமாகத்தான் இந்த பெரியார் விஷன் ஓ.டி.டி. ப்ளாட்ஃபார்ம் இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை உருவாக்கிய அத்தனை பேருக்கும் என் வாழ்த்துகள். தொடர்ந்து இதை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திரைப்பட நடிகர் சத்யராஜ், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், திராவிடர் கழக பொருளாளர் குமரேசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பரணிதரன் ஏற்பாட்டில் இ.எஸ்.தமிழ் கொடி முன்னிலையில்

# புழல் து. திருநாவுக்கரசு நினைவு நாள் நலத்திட்ட உதவிகள்!

## புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

மாதவரம், ஜூலை 23-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி, முன்னாள் புழல் பேரூர் செயலாளர், தலைமைக் கழக சொற்பொழிவாளர், 23வது வட்டச் செயலாளராக பணியாற்றிய புழல் து. திருநாவுக்கரசு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, அரசு பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்திற்கு தேவையான உபகரணங்கள், கழக முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி 23 வது வட்டம், காந்தி தெரு துர்க்கை அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அலுவலவளாகத்தில் நடைபெற்றது.

புழல் து. திருநாவுக்கரசு அறக்கட்டளையின் தலைவர் வி.பரணிதரன் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிக்கு தினகரன் பத்திரிகையின் மூத்த நிருபர் முன்னாள் மாவட்ட பிரதிநிதி இ. எஸ். தமிழ் கொடி முன்னிலை வகித்தார்.

24 ஆவது வட்ட நிர்வாகி ந.குணாநிதி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, முன்னாள் கவுன்சிலர்கள் அகிலா அந்தோணி, சீனு நாகராஜன், கே. பி. பி .அறிவழகன் ந.எழில்ராவணன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த புழல் து. திருநாவுக்கரசு அவர்களின் திருவுருவப்படத்திற்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கழக நிர்வாகிகள், பொதுமக்கள், முன்னோடிகள் என பலர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் வடகரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தேவையான அச்சுப்பொறி பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் தேர்வு தாள்கள் ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கிருஷ்ணன் குட்டி அவர்களிடம் வழங்கினார்.

அதேபோல புழல் காந்தி தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு தேவையான சத்துணவு மாவுகளை சேகரித்து வைக்கும் இரும்பு பெட்டியையும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அங்கன்வாடி மைய ஆசிரியரிடம் வழங்கினார்.

மேலும் கழகத்தின் முன்னோடிகள் 50 பேருக்கு சீருடைகள், 500 பேருக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நிர்வாகிகள் கெளரி அன்பழகன், பாலாஜி, ஆர். எம். கதிரவன்,க.ந.க. சைமன், விளங்காடுப்பாக்கம் சங்கர், பி. சாமிநாதன், பிஎஸ் என் எல் நாகராஜ், வழக்கறிஞர் கே பி எஸ். அன்பரசு, து.முரளிதரன், து.திருமாவளவன், தி. சித்தார்த்தன், தி.சிபி அரசு, நெளஷாத் அலி, எம்பி. முருகேசன்,மெட்ரோ ராஜன், ராஜேஷ்குமார், பூக்கடை செல்வம், உதயகுமார், உலகநாதன், பொறியாளர் சுதர் சிங், மதிவேந்தன், ஜே. கே. ஹரி கிருஷ்ணன் ஜீவ காருண்யம், பூரணம் சந்திரன், விஜயகுமார், நிர்மல் குமார் சுரேஷ், கபாலி, அப்பு, பாஸ்கர், காமேஷ், ராஜாமணி, மாநகராட்சி ஆனந்தன், லட்சுமணன், முத்துக்குமார், எலக்ட்ரீசியன் மகேந்திரன், ஜூனியர் அசோக்குமார், ஆட்டோ ரவி,ரூசோ, குட்டி செல்வகுமார், ஜெகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை புழல் து. திருநாவுக்கரசு அறக்கட்டளை நிறுவனர் புழல் வி. பரணிதரன் செய்திருந்தார்.





கழக சட்டதுறை சார்பில் வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், சட்டத்துறை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி தலைமையில் எழும்பூர் ரமடா ஓட்டலில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்ட துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் அனைத்து மாவட்ட/மாநகர அமைப்பாளர்கள் சட்டத்துறை இணை செயலாளர்கள், துணை செயலாளர்கள், தலைமை கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.